


**06. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

**1.** குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு எனது பாரதம் - நாட்டு நலப்பணி திட்ட சேவை விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்கினார்.

**2.** நம் நாடு வளர்ந்த தேசமாக உருவெடுக்க கல்வியின் பங்களிப்பை மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின்கட்காரி எடுத்துரைத்தார்.

**3.** தமிழக அரசு ஆளுநர் விவகாரத்தில் அரசியல் செய்வதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. பொதுத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 20 சதவிகிதம் வரை மிகை ஊதியமும், கருணை தொகையும் மாநில அரசு அறிவித்துள்ளது.

**5.** இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதில் நாகையை சேர்ந்த 11 மீனவர்கள் காயமடைந்தனர்.

## இனி விரிவான செய்திகள்

***********

### குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு எனது பாரதம் - நாட்டு நலப்பணி திட்ட சேவை விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்கினார்.

குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணி பிரிவுகள், திட்ட அலுவலர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்டோருக்கு 40 விருதுகளை திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

தேச கட்டமைப்பு, சமூகசேவை பிரிவுகளில் அளப்பரிய சேவையாற்றிய, நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் ஆண்டுதோறும் மத்திய இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சகத்தின் சார்பில் இவ்விருது வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில் மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா பங்கேற்றார்.

1969ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட நாட்டு நல பணி இயக்கம் இளைஞர்கள் சமூக பணியாற்றவும், தனி நபர் மேம்பாட்டை நோக்கமாகவும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

***********

### நிதின்கட்காரி

நம் நாடு வளர்ந்த தேசமாக உருவெடுக்க கல்வி இன்றியமையா பங்கு வகிக்கும் என்று மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின்கட்காரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உயர்கல்வி உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், 3ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவாக விரும்பும் இத்தருணத்தில், இந்த இலக்கை எட்ட, நாம் கல்வித்துறையை வலுப்படுத்துவது அவசியமானது என்றார்.

அனைத்து துறைகளிலும் மேம்பட, கல்வியின் பங்களிப்பை சுட்டிக்காட்டிய அமைச்சர் நம் நாட்டில் ஏராளமான திறன்படைத்த, பயிற்சி பெற்ற, இளைய படைப்பாற்றல் பொறியாளர்கள் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

கல்வி, ஆராய்ச்சி, எதிர்கால மேம்பாடு, போன்றவற்றிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அமைச்சர் வளர்ச்சி அடைந்த நாடுகள் இத்துறைகளில் முன்னிலை வகிப்பதை எடுத்துரைத்தார்.

தற்சார்பு நாடாக நம் தேசம் உருவெடுக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் திரு.நிதின்கட்காரி கேட்டுக்கொண்டார்.

***********

**எல்.முருகன்**

தமிழக அரசு ஆளுநர் விவகாரத்தில் அரசியல் செய்வதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேண்டுமென்றே தவறான கோப்புகளை தமிழக அரசு, ஆளுநரிடம் அனுப்புவதாக குறை கூறினார்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் துரதஸ்டவசமானது என்று கூறிய அவர், இதுதொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தேசிய ஜனநாயக கூட்டணி பிரதிநிதி குழுவின் அறிக்கை ஆய்வு செய்யப்படுவதாக கூறினார்.

கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர், தமிழக அரசின் கேபிள் தொலைக்காட்சி சேவையிலிருந்து சில தொலைக்காட்சிகள் தேவையின்றி நீக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

***********

**பீஹார் தேர்தல்**

பீகார் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான தேதியை தேர்தல் ஆணையம் புதுதில்லியில் இன்று மாலை அறிவிக்கின்றது.

தலைமை தேர்தல் ஆணையர் திரு.க்யானேஸ்குமார் தேர்தல் ஆணையர்கள் சுக்பீர்சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோர் இதனை அறிவிக்க உள்ளனர்.

இந்த அறிவிப்பை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அங்கு உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

243 உறுப்பினர்களை கொண்ட பீகார் சட்டப்பேரவையின் பதவிக்காலம் அடுத்த மாதம் 22ஆம் தேதியுடன் நிறைவுக்கு வருகிறது.

***********

**போனஸ்**

தமிழக அரசின் பொதுத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியமும், கருணை தொகையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2 லட்சத்து 69 ஆயிரத்து 439க்கும் மேற்பட்ட **சி** மற்றும் **டி** பிரிவு பணியாளர்கள் 20 சதவிகிதம் வரை மிகை ஊதியம் பெறுவார்கள்.

தகுதியான நிரந்தர தொழிலாளர்கள் குறைந்தபட்சம் 8 ஆயிரத்து 400 ரூபாய் முதல் அதிகபட்சம் 16 ஆயிரத்து 800 ரூபாய் வரை மிகை ஊதியம் பெறுவார்கள்.

கூட்டுறவு அமைப்புகள், நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

***********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் 406 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் விருதுநகர், திருவண்ணாமலை தூத்துக்குடி, சிவகங்கை மாவட்டங்களில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 772 புதிய வீடுகள்,

மக்கள் நல்வாழ்வு சார்பில் பழனி, திருப்பத்தூர், கூடலூர் தலைமை மருத்துவமனைகளில் கூடுதல் கட்டிடங்கள், உள்ளிட்டவை இதில் அடங்கும்.

காட்பாடி, பழனி, திருப்பத்தூர், கூடலூர், சங்கராபுரம், மேலூர் உள்ளிட்ட 6 அரசு மருத்துவமனைகயில் 108 கோடியே 50 லட்சம ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்களை முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார்.

தென்காசி, திருப்பத்தூர், தஞ்சை, மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில் மருந்து கிடங்குகளை திறந்துவைத்தார்.

மதுரை உணவு பகுப்பாய்வுகூட வளாகத்தில் புதிய ஆய்வக கட்டடம்,

சென்னையில் புதிய மருந்து கட்டுப்பாடு நிர்வாக இயக்க கட்டடம்,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலக கட்டடம் உள்ளிட்டவற்றை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

தமிழக திருக்கோவில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட 5 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் மற்றும் 2 ஆயிரத்து 500 ரூபாய் குடும்ப ஓய்வூதியத்திற்கான காசோலைகளை முதலமைச்சர் வழங்கினார்.

***********

**மா.சுப்பிரமணியன்**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையை ஒட்டி காய்ச்சல் உள்ளிட்ட நோய்களை தடுக்கும் வகையில் மழைக்கால முன்னெச்சரிக்கை ஆலோசனைக்கூட்டம் நாளை சென்னை ஓமாந்தூரார் அரசு மருத்துவமனையில் நடைபெறும் என்று மாநில மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊரக உள்ளாட்சி துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் இதில் பங்கேற்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருவண்ணாமலை மாவட்டம் கண்ணமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் அமைச்சர் ஆய்வு செய்து, இல்லம் தேடி மருத்துவ முகாமில் முறையாக மாத்திரைகள் வழங்கப்படுகிறதா என்பதை நோயாளிகளிடம் கேட்டறிந்தார்.

நாய்க்கடி பாம்புகடிக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மருந்து மாத்திரைகள் போதிய அளவில் இருப்பில் வைக்க திரு.மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தினார்.

***********

**மீனவர்கள்**

கோடியக்கரை அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகை மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதில் 11 பேர் காயமடைந்தனர்.

கடற்கொள்ளையர்கள் நாட்டு வெடிகுண்டுகளையும், ஆயுதங்களையும் பிரயோகித்து தாக்குதல் நடத்தியதில் பலத்த காயமடைந்த 10 மீனவர்கள் நாகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும்,

ஒருவர் தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**இதுகுறித்து எமது நாகை செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**காஞ்சிபுரம் வாய்ஸ்**

காஞ்சிபுரம் பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித்திட்ட மாணாக்கர் தேனாம்பாக்கம் ஏரிக்கரையில் ஆயிரம் பனை விதைகளை இன்று **விதைத்தனர்.**

இதன்மூலம் மண் அரிப்பை தடுக்க இந்நடவடிக்கை என்று பள்ளி மாணவர் ஒருவர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

***********

**தேசிய அஞ்சல் வாரம்**

தேசிய அஞ்சல் வாரம் இன்றுமுதல் வரும் 10ஆம் தேதிவரை கடைபிடிக்கப்படுகிறது.

முதல் நாளான இன்று தொழில்நுட்ப தினமும்,

தொடர்ந்து நிதி சேர்க்கை நாள்,

அஞ்சல் தலை சேகரிப்பு தினம்,

உலக அஞ்சல் தினம் வாடிக்கையாளர் தினம் உள்ளிட்டவை கொண்டாடப்பட உள்ளன.

அஞ்சல் வாரத்தை ஒட்டி மத்திய மாநில அரசுகள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்துள்ளன.

***********

**இருவரி**

**பெரம்பலூர் மாவட்டத்தில் தேசிய** தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி அறிவுறுத்தினார்.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக** மக்கள் குறைதீர் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் உத்தரவிட்டார்.

**நாமக்கல் மாவட்டத்தில் இளம்** சாதனையாளர்களுக்கான பிரதமரின் கல்வி உதவிதொகை திட்டத்தின் கீழ் பயன்பெற இதற்கான இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாமறு ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

***********

**மேட்டூர்**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு ஆறாயிரத்து 251 கன அடியாக உள்ளது.

அணையிலிருந்து பாசனத்திற்காக 15 ஆயிரத்து 500 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 113.27 அடியாகும்.

***********

**வானிலை**

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி கிருஷ்ணகிரி தர்மபுரி சேலம் திருப்பத்தூர் கள்ளக்குறிச்சி விழுப்புரம் கடலூர் மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வரும் 10 ஆம் தேதிவரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

***********

**பேட்மிண்டன்**

குஹாட்டியில் உலக இளையோர் பேட்மிண்டன் சேம்பியன் பட்ட போட்டிகள் இன்று தொடங்கின.

வரும் 19ஆம் தேதிவரை இரு கட்டங்களாக இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**